Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஒசை 60 | உள்ளூர் - 01.03.2026 | ஞாயிறு | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 60 | வெளியூர் - 02.03.2026 | திங்கள் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

சமையல் கலையில் ஆர்வம் உள்ள ராசிகள்!
இந்திய இராணுவத்தில் 76 காலியிடங்கள்
பெண்களுக்கு குட் நியூஸ்..!!
குன்றத்தில் பிரதமர்!


### ஈரான் தலைவர் கமேனி கொலை..

# காலி செய்த அமெரிக்கா, இஸ்ரேல்...!

## உச்சக்கட்ட பதற்றம்!!







ஈரான், மார்ச். 01–

ஈரான் நாட்டு தலைவர் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டதாக அமெரிக்காவும் இஸ்ரேலும் அறிவித்த நிலையில் ஈரான் நாட்டு அரசும் இதனை உறுதி செய்திருக்கிறது. இது உலக அரசியலில் பெரும் பர பரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. அமெரிக்காவும் இஸ்ரேலும் திடீரென ஈரான் மீது தாக்குதலை தொடங்கின. தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட பல பகுதிகளையும் குறி வைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. பல இடங்களில் சரமாரியாக குண்டுகளை வீசின. பதிலுக்கு ஈரானும் அமெரிக்க நிலைகள் மீது தாக்குதலை நடத்தியது. இந்த சூழலில் ஈரான் நாட்டு தலைவர் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டார் என இஸ்ரேல் நாட்டு செய்தி நிறுவனம் அறிவித்தது.

அதிபர் டிரம்பும், பாதிக்க ப்பட்ட ஈரான் மக்களுக்கு நீதி கிடைத்துள்ளது என்றும் வரலாற்றிலேயே மிக மோசமான மனிதராக கருதப்படும் அயத்துல்லா கமேனி கொல்லப்பட்டார் என்றும் தன்னுடைய சமூக வலைதள பக்கத்தில் பதிவு செய்திருந்தார். இந்த சூழலில் ஈரான் நாட்டு அரசின் செய்தி ஊடகம் தலைவர் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இந்திய நேரப்படி காலை 7 மணி அளவில் ஈரான் நாட்டு செய்தி தொலைகாட்சிகளில் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்ட தகவல் பிரேக்கிங் செய்தியாக ஒளிபரப்பபட்டது. இதனை அடுத்து நாடு முழுவதும் 40 நாட்கள் துக்கம் அனுசரிக்க ப்பட்டிருப்பதாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. நாடு முழுவதும் ஏழு நாட்களுக்கு பொது விடுமுறை இருக்கும் என்றும் 40 நாட்களுக்கு துக்கம் அனுசரிக்கப்படும் என்றும் ஃபார் நியூஸ் ஏஜென்சி செய்தி வெளியிட்டு இருக்கிறது. கமேனியின் மரணத்திற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என ஈரான் புரட்சிகர பாதுகாப்பு படை சூளுரைத்து ள்ளது. இதனால் ஈரானில் பதற்றம் உச்சக்கட்டத்தை எட்டியு ள்ளது. 1989 ஆம் ஆண்டு முதல் ஈரான் நாட்டு தலைவராக செயல்பட்டு வந்தவர் அயத்துல்லா அலி கமேனி. நீண்ட காலம் ஈரானை ஆட்சி செய்து வரக்கூடியவராகவும், இந்த பிராந்தியத்தின் ஆதிக்கம் மிக்க மத தலைவராகவும் அவர் திகழ்ந்து வந்தார். அமெரிக்காவுக்கும் இஸ்ரே லுக்கும் சிம்ம சொப்பனமாக இருந்தவர். பல ஆண்டுகளாக அவரை குறி வைத்து திட்டமிட்டு அமெரிக்காவும் இஸ்ரேலும் அவரை கொலை செய்துள்ளன.

கிட்டத்தட்ட 30 ஆண்டு காலமாக அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் சிம்ம சொப்பனமாக திகழ்ந்தவர் கமேனி. அமெரிக்காவின் மிரட்டலுக்கும் இஸ்ரேலின் தாக்குதலுக்கு அஞ்சாதவர். ஆனால் இந்த முறை அவர் சற்றே அசந்திருந்த சூழலை பயன்படுத்தி இரு நாடுகளும் கூட்டு சதி செய்து தாக்குத லை நடத்தி முடித்திரு க்கின்றன. இந்த முறை இரு நாடுகளுமே அயத்துல்லா அலி கமேனியை குறி வைத்து தான் தாக்குத ல்களையே தொடங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உயர் தொழில்நுட்பம் கொண்டு அயத்துல்லா அலி கமேனியின் ஒவ்வொரு நகர்வையும் இஸ்ரேலும் அமெரிக்காவும் உளவு பார்த்துள்ளன. அவர் எங்கு செல்கிறார், யாரை சந்திக்கிறார், எந்த நேரத்தில் அலுவலகத்தில் இருப்பார் என்பதை எல்லாம் துல்லிய மாக கண்காணித்து வந்துள்ளனர்.

முதலில் டெஹ்ரான் மற்றும் பல்வேறு இடங்களிலும் 500 தளங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்திருக்கி றது. இந்த தாக்குதலில் அமெரிக்காவும் கை கோர்த்துள்ளது. இந்த தாக்குதலை அடுத்து கமேனி நாட்டின் உயர்மட்ட தலைவர்க ளை சந்திப்பார் அதன் பின் பதுங்கு குழியில் சென்று தப்பித்து கொள்வார் என அறிந்த அமெரிக்க, இஸ்ரேல் படைகள் கமேனியின் ஒவ்வொரு நகர்வையும் நொடிக்கு நொடி கண்காணி த்துள்ளன.

அப்படி தான் டெஹ்ரானில் அவர் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய போது குண்டுவீசி தாக்கியுள்ளனர். அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டு தாக்கு தலில் கமேனி மட்டும் இல்லா மல் நாட்டின் முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அலி ஷங்கானி மற்றும் ஈரான் நாட்டு ராணுவத்தின் கமாண்டர் முகமது பக்பூர் ஆகியோரும் கொல்லப்ப ட்டதாக இஸ்ரேல் தரப்பு செய்தி தெரிவிக்கிறது. முதலில் கமேனி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அலிலாரி ஜானியை சந்தித்து பேசியுள்ளார். அதன் பின் ஷங்கானி மற்றும் கமாண்டர் முகமது வுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். அந்த சமயத்தில் தான் தாக்குதல் நடந்ததாக செய்திகள் கூறுகின்றன.

அவர் பதுங்கு குழிக்குள் செல்வதற்குள் தாக்குதல் நடத்த வேண்டும் என்பதால் அமெரிக்க , இஸ்ரேல் படைகள் டெஹ்ரானில் அயத்துல்லா அலி கமேனியின் அலுவலகத்தை குறி வைத்து தயாராக இருந்துள்ளன. அவர் உள்ளே இருப்பது உறுதியான உடன் தாக்குதலை நடத்தியுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. Highly sophisticat–ed tracking system மூலம் கமேனியை கண்காணித்தோம் என டிரம்பே கூறியுள்ளார். இது தவிர கமேனியின் குடும்ப உறுப்பினர்களை குறி வைத்தும் இஸ்ரேல் தரப்பில் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது. டெஹ்ரானில் ஒரு இடத்தில் கமேனியின் மருமகன் மறைந்திருந்ததாக்வும் அங்கே கிட்டத்தட்ட 30 குண்டுகள் வீசி அவரையும் கொலை செய்ததாகவும் இஸ்ரேல் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# மதுரையில் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி!



மதுரை, மார்ச். 01–

விரைவில் தமிழக சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட இருக்கும் நிலையில், சில நாட்களுக்கு முன்பு மதுராந்தகத்தில் நடந்த தேசிய ஜனநாயக கூட்டணி கூட்டத்தில் பிரதமர் மோடி பேசினார். தற்போது 2–வது முறையாக அவர் தமிழகம் வந்து, இன்று (ஞாயிற்றுக்கிழமை) மதுரையில் பேசினார்.

இதற்காக மதுரை மண்டேலா நகர் சுற்றுச்சாலை பகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரமாண்ட பிரசார பொதுக்கூட்டம் இன்று மாலை நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலா ளர் எடப்பாடி பழனிசாமி, மத்திய மந்திரிகள் பியூஸ் கோயல், எல்.முருகன், பா.ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன்,

முன்னாள் தலைவர்கள் அண்ணாமலை, தமிழிசை சவுந்தரராஜன், கூட்டணி கட்சிகளான அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி. வி.தினகரன், பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், ஜி.கே.வாசன், ஐ.ஜே.கே நிறுவனர் பாரி வேந்தர், ஜான்பாண்டியன், புரட்சி பாரதம் பூவை ஜெகன் மூர்த்தி உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

கூட்டம் நடைபெறும் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வெடிகுண்டு தடுப்பு நிபுணர்கள் 20–க்கும் மேற்பட்ட குழுக்களாக மோப்பநாய் மூலம் தீவிர சோதனை மேற்கொண்டனர். தொண்டர்கள் அனைவரும் பலத்த சோதனைக்கு பின்னரே கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். மேலும் பொதுக்கூட்டம் நடைபெறும் பகுதியை சுற்றிலும் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டிருந்தது. முன்னதாக இன்று காலையில் புதுச்சேரியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் பிரதமர் மோடி, அங்கிருந்து ஹெலி காப்டரில் தஞ்சை வந்தார். பின் அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு மதியம் மதுரை விமான நிலையம் வந்த பிரதமருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின் குன்றத்து முருகனை தரிசித்த பின் பொதுக்கூட்டத்தில் கலந்துரையாடினார்.







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது 73–வது பிறந்தநாளையொட்டி சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, கலைஞர் மற்றும் சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் அமைந்துள்ள தந்தை பெரியார் ஆகியோர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன், கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.



தலையங்கம்

மதுரை மணி

ஞாயிற்றுக்கிழமை 01.03.2026

விசுவாவசு தமிழ் வருடம்

மாசி மாதம் 17-ம் தேதி

## முதலீட்டாளர்களே உஷார்! இஸ்ரேல்–ஈரான் போர்!!




ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ராணுவத்தினர், வான்வழித் தாக்குதலை முழு வீச்சில் தொடங்கியுள்ளனர். குறிப்பாக தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட அனைத்து முக்கிய நகரங்கள் மீதும் ஏவுகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு ஈரான் அரசு அவசர அறிவிப்பை கொடுத்துள்ளது. கடந்த ஆண்டு ஜூன் மாதம் 12 நாட்கள் நடந்த வான்வழி போரைத் தொடர்ந்து, இன்று இஸ்ரேல் ஈரான் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. அதேசமயம் அமெரிக்காவும் தனது தாக்குதல்களை தொடங்கியுள்ளது.

இது மத்திய கிழக்கு பகுதிகளை மீண்டும் பதற்றமான சூழலுக்கு தள்ளியுள்ளது. இது ஈரானின் அணுசக்தி விவகாரத்தில் மேற்கத்திய நாடுகளுடன் இருந்த தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தை மற்றும் தீர்வுக்கான நம்பிக்கையையும் முற்றிலும் சிதைத்துள்ளது.

ஈரானுக்குள் இருக்கும் இலக்குகள் மீது அமெரிக்க ராணுவம் தொடர்ச்சியான தாக்குதல்களைத் தொடங்கியுள்ளதாக கூறப்படும் நிலையில், ஈரானும் ஒரு மிகக் கடுமையான பதிலடிக்கு தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள இந்த மோதல் போக்கு, புவிசார் அரசியல் பதற்றங்களையும் முதலீட்டாளர்கள் மத்தியிலான நிச்சயமற்ற தன்மையையும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, வரும் திங்கட்கிழமை வர்த்தகம் தொடங்கும்போது பங்குச் சந்தை, தங்கம் மற்றும் வெள்ளி ஆகியவற்றின் விலைகளில் பெரும் மாற்றங்கள் இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக தங்கம், வெள்ளி விலையானது கேப் அப் ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பங்குச் சந்தைகள் மீண்டும் கடும் வீழ்ச்சியை சந்திக்கலாம். கச்சா எண்ணெய் விலையில் பெரிய அளவிலான ஏற்றம் இருக்கலாமென நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

குறிப்பாக சர்வதேச பங்குச் சந்தைகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்திய பங்குச் சந்தைகள் ஏற்கனவே செல்லிங் அழுத்தத்தில் காணப்படும் சூழலில், இப்பிரச்சனையானது இன்னும் ரத்த களரியாக மாறலாம். முதலீட்டாளர்கள் பாதுகாப்பு கருதி, இந்திய பங்குச் சந்தையில் இருந்து வெளியேறி, பாதுகாப்பு புகலிடமான தங்கத்தில் முதலீடுகளை செய்யலாம். பங்குச் சந்தைகள் வரும் திங்கட்கிழமை அன்று கேப் டவுன் ஆகி தொடங்கும் வாய்ப்புகள் அதிகம். அப்படி இல்லையேல் கடுமையான வீழ்ச்சி இருக்கலாம். இப்பிரச்சனையானது இன்னும் பூதகரமாகலாம் என்ற சூழலே தற்போதைய நிலையில் தெரிகிறது. ஆக பங்குச் சந்தை முதலீட்டாளர்கள் மிக கவனமுடன் இருப்பது நல்லது.



## சினிமா துளிகள்..!

### சூர்யா 46 ஃபர்ஸ்ட் லுக் அப்டேட்!



நடிகர் சூர்யாவின் 46வது திரைப்படத்தின் ஃபர்ஸ்ட் லுக் அப்டேட் அதிகாரப்பூர்வமாக வெளியாகி உள்ளது. இயக்குநர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படத்திற்கு தற்காலிகமாக "சூர்யா 46" என தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் நடிகர் சூர்யாவுடன் மமிதா பைஜூ, ரவீனா டான்டன், பவானி ஸ்ரீ, ராதிகா சரத்குமார் மற்றும் பலர் நடிக்கின்றனர்.

சித்தாரா என்டர்டெயின்மென்ட்ஸ் சார்பில் நாக வம்சி தயாரிக்கும் இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் நாளை (மார்ச் 2) காலை 10.18 மணிக்கு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்கிறார். இந்தப் படத்திற்கு ஒளிப்பதிவு பணிகளை நிமிஷ் ரவி மேற்கொள்ள நவீன் நூலி படத்தொகுப்பு செய்கிறார்.

2005ஆம் ஆண்டு சூர்யா நடிப்பில் வெளியான கஜினி படத்தின் சஞ்சய் ராமசாமி கதாபாத்திரம் போன்றே சூர்யா 46 படத்தில் நடிகர் சூர்யாவின் கதாபாத்திரம் இருக்கும் என்று இயக்குநர் வெங்கி அட்லூரி தெரிவித்து இருக்கிறார். இந்தப் படத்தின் இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வரும் நிலையில், வருகிற ஏப்ரல் அல்லது மே மாத வாக்கில் வெளியாகும் என்று தெரிகிறது.

# அஜித் பவார் விமானம் விபத்தில் சிக்கியது எப்படி? கடைசி நிமிடத்தில் நடந்தது என்ன? - வெளியானது அறிக்கை!

மகாராஷ்டிரா, மார்ச். 01–

மகாராஷ்டிரா துணை முதல்வராக இருந்த அஜித் பவார் கடந்த ஜனவரி 28–ம் தேதி நடந்த விமான விபத்தில் உயிரிழந்தார். அவருடன் மேலும் நால்வர் உயிரிழந்தனர்.

அஜித் பவார் உள்ளாட்சி தேர்தலில் பாஜகவை எதிர்த்து சரத் பவார் தேசியவாத காங்கிரஸ் உடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டதாலும், பாஜக உள்ளாட்சிகளில் ஊழல் செய்வதாக கடுமையாக விமர்சித்ததாலும் அவரின் மரணத்தில் எதிர்க்கட்சிகள் சந்தேகம் கிளப்பின.

மேலும் பெரிய சேதங்களை தாங்கும் விமானத்தின் கருப்பு பெட்டி இந்த விபத்தில் சேதமடைந்ததாக கூறப்பட்டதால் சந்தேகம் மேலும் வலுத்தது. அஜித் பவாரின் மகனும் இந்த சந்தேகத்தை எழுப்பியிருந்தார்.

இந்த சூழலில் இந்த விபத்து குறித்து விமான விபத்து விசாரணை வாரியம் (AAIB) தற்போது தனது முதற்கட்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அறிக்கைபடி, விபத்து நடந்த சமயத்தில் பாராமதி பகுதியில் மோசமான வானிலை காரணமாக பார்வை தூரம் மிகக் குறைவாக இருந்துள்ளது. விமானங்கள் தரையிறங்குவதற்கு குறைந்தபட்சம் 5,000 மீட்டர் கண்பார்வை தூரம் தேவை. ஆனால், விபத்தின் போது இது



மிகவும் குறைவாக இருந்துள்ளது.

விமானம் தரையிறங்கும் முன் விமானிகள் பார்வை தூரம் குறித்துக் கேட்டபோது, கட்டுப்பாட்டு அறையிலிருந்து 3,000 மீட்டர் இருப்பதாகப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இது தரையிறங்குவதற்குப் போதுமான தூரம் இல்லை என்றாலும், தரையிறங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விபத்து நடந்த அன்று கட்டுப்பாட்டு அறையை ஒரு பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த தரைவழி பயிற்றுவிப்பாளர் இயக்கியுள்ளார். அவரே விமானிகளுடன் தொடர்புகொண்டு தரையிறங்க அனுமதி அளித்துள்ளார்.

பாராமதி விமான நிலைய ஓடுதளம் கடைசியாக 2016–ல் தான் சீரமைக்கப்பட்டுள்ளது. இதனால் ஓடுதளத்தில் உள்ள அடையாளக் குறிகள் மங்கிப் போயிருந்தன. மேலும், ஓடுதளத்தில் ஜல்லிக்கற்கள் சிதறிக் கிடந்ததையும் விசாரணைக்குழு கண்டறிந்துள்ளது.

இந்த விபத்தில் காக்பிட் குரல் பதிவுக்கருவி சேதமடைந்துள்ளது. தேசிய போக்குவரத்து பாதுகாப்பு வாரியத்தின் உதவியுடன், அதில் உள்ள தரவுகளைப் பதிவிறக்கம் செய்து ஆய்வு செய்ய AAIB திட்டமிட்டுள்ளது.

கட்டுப்பாடற்ற விமான நிலையங்களில் பாதுகாப்புத் தரநிலைகள் முறையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என AAIB பரிந்துரைத்துள்ளது.

விபத்துக்கான மூலக் காரணம் மற்றும் உண்மைகளை வெளிக்கொண்டு வர முழு அளவிலான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாக AAIB தெரிவித்துள்ளது.

# ஹோண்டா மோட்டார்சைக்கிள் & ஸ்கூட்டர் இந்தியா மதுரையில் சாலை பாதுகாப்பு கன்வென்ஷன் நடத்தியது

மதுரை, மார்ச். 01–

ஹோண்டா மோட்டார்சைக்கிள் & ஸ்கூட்டர் இந்தியா




(HMSI) மதுரையில் சாலை பாதுகாப்பு கன்வென்ஷன் நடத்தி, 140–க்கும் மேற்பட்ட பள்ளி முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களை இணைத்தது. குழந்தைகள் சிறுவயதிலிருந்தே பாதுகாப்பான சாலை பழக்கங்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற நோக்கில், 'Kids' Mindset Change' திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நிகழ்வு நடைபெற்றது. மதுரையில் அதிகரித்து வரும் இருசக்கர வாகன விபத்துகளை முன்னிட்டு, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு அவசியம் வலியுறுத்தப்பட்டது.

நிகழ்வில் கல்வி மற்றும் போக்குவரத்து துறை அதிகாரிகளுடன், HMSI சார்பில் பொது மேலாளர் பாதுகாப்பான ஓட்டுதல் ஷிஷிர் சதுர்வேதி மற்றும் பொது மேலாளர் வெளிப்புற விவகாரங்கள் நிதின் பவார் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மொடியூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன், பள்ளிகளில் அவற்றை பாடத்திட்டத்துடன் ஒருங்கிணைக்க ஊக்குவிக்கப்பட்டது. இந்த மொட்யூல்கள் பல மொழிகளில், நேரலை மற்றும் பதிவிறக்கம் வசதியுடன் வழங்கப்படுகின்றன. "HMSI–யின் 'Safety for Everyone' நோக்கத்தின் கீழ், எதிர்கால தலைமுறையில் பாதுகாப்பான சாலை நடத்தை உருவாக்குவது எங்கள் முக்கிய இலக்காகும். பள்ளிகள் மூலம் மாண வர்களை நேரடியாக சென்றடைவது, சமுதாயத்தில் நீண்ட கால மாற்றத்தை உருவாக்கும்," என்று HMSI சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் 24 கான்வென்ஷன்கள் மூலம் 11.5 லட்சம் மாணவர்களை சென்றடைந்துள்ளது நிறுவனம், இந்த ஆண்டில் மேலும் பல பள்ளிகளை இணைக்க திட்டமிட்டுள்ளது.

# நாக்பூரில் வெடிபொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் வெடிவிபத்து: 15 பேர் பலி!



நாக்பூர், மார்ச். 01–

நாக்பூரில் வெடிபொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 15 பேர் பலியான நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மகாராஷ்டிர மாநிலம், கட்டோல் தெஹ்சிலில் உள்ள ரௌல்கானில் சுரங்க மற்றும் தொழில்துறை வெடிபொருள் உற்பத்தி செய்யும் எஸ்பிஎல் எனர்ஜி லிமிடெட் தொழிற்சாலை இயங்கி வருகிறது.

இந்த தொழிற்சாலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வெடிவிபத்து நிகழ்ந்ததாக மூத்த போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார். இதில் 15 பேர் பலியாகினர்.

எஸ்பிஎல் எனர்ஜி லிமிடெட் பிரதிநிதிகள் கூறுகையில், இந்த சம்பவம் நிறுவனத்தின் டெட்டனேட்டர் பேக்கிங் யூனிட்டில் காலை 7 மணி முதல் காலை 7.15 மணி வரை நடந்தது. வெடி விபத்து நடந்த உடனேயே காயமடைந்தவர்கள் நாக்பூரில் உள்ள மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக போலீஸார் தெரிவித்தனர். மீட்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாகவும், விரைவில் அறிக்கை வெளியிடப்படும் என்றும் நிறுவன அதிகாரி ஒருவர் கூறினார்.

# திருவண்ணாமலையில் நாளை பவுர்ணமி கிரிவலம் செல்ல உகந்த நேரம்!

திருவண்ணாமலை, மார்ச். 01–

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவிலில் மலையே சிவனாக வணங்கப்படும் 14 கிலோ மீட்டர் தூரம் உள்ள அண்ணாமலையை மாதம் தோறும் வரும் பவுர்ணமி தினத்தில் பல லட்சம் பக்தர்கள் வலம் வந்து வழிபடுவது வழக்கம். மாசி மாதத்திற்கான பவுர்ணமி நாளை மாலை 6.29 மணிக்கு தொடங்கி நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) மாலை 5.52 மணிக்கு நிறைவு பெறுகிறது. இந்த நேரம் பவுர்ணமி கிரிவலம் வர உகந்த நேரமாக அருணாசலேஸ்வரர் கோவில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரயில்வே அரிப்பு செலவு குறைக்க சிங்க் தரநிலைகள் அவசியம்: நிபுணர்கள்!

சென்னை ,மார்ச். 01–

இந்தியா தனது ரயில் பெட்டி வடிவமைப்பு மற்றும் பொருள் தேர்வு நடைமுறைகளை உலகளாவிய தரநிலைகளுடன் ஒத்திசைக்க வேண்டும் என்று ரயில்வே நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கோச் ஷெல்கள் வெளிப்புற துருப்பிடிப்பை குறைத்தாலும், அண்டர்ஃப்ரேம்கள், பிராக்கெட்டுகள், மவுண்ட்கள் மற்றும் ஈரப்பதத்திற்கு வெளிப்படும் பிற எஃகு கூறுகளில் அரிப்பு பிரச்சினை தொடர்ந்து செலவின சுமையை ஏற்படுத்துகிறது என அவர்கள் எச்சரிக்கின்றனர்.

உலகளவில், ஐரோப்பா, ஜப்பான் மற்றும் வட அமெரிக்கா போன்ற பகுதிகளில், கட்டமைப்பு தேவைகளுக்கு ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பயன்படுத்தப்படுகின்றது; அதேவேளை கண்ணுக்குத் தெரியாத, அரிப்பு ஆபத்து அதிகமான கூறுகள் கால்வனைசேஷன் போன்ற ஜிங்க் அடிப்படையிலான பூச்சுகளால் பாதுகாக்கப்படுகின்றன. International Zinc Associationஇந்தியாவின் பிரதிநிதி டாக்டர் ராகுல் சர்மா கூறுகையில், இந்த முறையால் கூறுகளின் ஆயுள் மூன்று முதல் ஐந்து மடங்கு வரை நீடிக்க முடியும் என விளக்கினார்.

நிபுணர்கள் கூறுவதாவது, இந்தியாவில் ஆரம்ப கட்ட செலவைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் பொருள் தேர்வு நீண்டகால பராமரிப்பு செலவுகளை அதிகரிக்கிறது. அதற்கு பதிலாக, ஜிங்க் அடிப்படையிலான பாதுகாப்பு முறைகளை ஒருங்கிணைப்பது வாழ்க்கைச் சுழற்சி செலவைக் குறைத்து, பராமரிப்பு இடைவெளிகளை குறைத்து, சொத்து கிடைப்பை மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த உதவும்.

# ரயில்வே அரிப்பு செலவை குறைக்க சிங்க் அடிப்படையிலான உலக தரநிலைகள் அவசியம்: நிபுணர்கள்

கோயம்புத்தூர் , மார்ச். 01–

இந்தியா தனது ரயில் பெட்டி வடிவமைப்பு மற்றும் பொருள் பயன்பாட்டு நடைமுறைகளை உலகளாவிய தரநிலைகளுக்கு ஏற்ப மாற்ற வேண்டும் என ரயில்வே நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். வெளிப்புறங்களில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பயன்பாடு துருப்பிடிப்பை குறைத்தாலும், அண்டர்ஃப்ரேம்கள், பிராக்கெட்டுகள், மவுண்ட்கள் மற்றும் ஈரப்பதம், அதிர்வு போன்ற சூழ்நிலைகளுக்கு உட்படும் உள் கூறுகளில் அரிப்பு காரணமான செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உலகளவில், International Zinc Association போன்ற அமைப்புகள் பரிந்துரைக்கும் முறையில், கண்ணுக்குத் தெரியாத ஆனால் அதிக அரிப்பு ஆபத்து உள்ள கூறுகளுக்கு ஜிங்க் அடிப்படையிலான பூச்சுகள் மற்றும் கால்வனைசேஷன் பயன்படுத்தப்படுகின்றன. "ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வெளிப்புறத்தை பாதுகாக்கிறது; ஆனால் அண்டர்ஃப்ரேம் மற்றும் துணைக் கூறுகளில் ஜிங்க் பூச்சுகள் பயன்படுத்தினால் கூறுகளின் ஆயுளை 3 முதல் 5 மடங்கு நீட்டிக்கலாம்," என Dr. Rahul Sharma தெரிவித்தார்.

ஆரம்ப செலவைக் கவனிக்கும் அணுகுமுறையை விட வாழ்க்கைச் சுழற்சி செலவுக் கணக்கீட்டை மையமாகக் கொண்ட பொருள் தேர்வு அவசியம் என நிபுணர்கள் கூறுகின்றனர். ஜிங்க் அடிப்படையிலான பாதுகாப்பு முறைகள் பராமரிப்பு தடுப்புகளை குறைத்து, சொத்து பயன்பாட்டு திறனை உயர்த்தி, நீண்டகால செலவுக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் முக்கிய தீர்வாக அமையும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.



# சமையல் கலையில் ஆர்வம் அதிகம் கொண்டிருக்கும் ராசிகள்!



வேத ஜோதிட நிபுணர்கள் கூற்றுப்படி ஒவ்வொரு ராசிக்கும் தனித்துவமான படைப்பாற்றல் இருப்பதாக குறிப்பிடப்படுகிறது. சமையில் துறையில் சிறந்து விளங்கும் ராசிகள் என பார்க்கும் வகையில் ரிஷபம், சிம்மம் உட்பட 6 ராசிகள் குறிப்பிடப்படுகிறது. அதாவது, சமையல் துறையில் தங்கள் தனித்துவமான திறமைகளை வெளிப்படுத்தி, தங்களுக்கென ஒரு தனி இடத்தை பெறும் ராசிகள் எது? சமையல் துறையில் இவர்கள் கொண்டு வர இருக்கும் மாற்றங்கள் என்ன? என்பது குறித்து சற்று விரிவாக இங்கு நாம் காணலாம்!

**ரிஷபம்!**

சுக்கிரனை ஆளும் கிரகமாக கொண்ட இந்த ரிஷப ராசியினர், தங்களின் ரசனைகளுக்கு பெயர் பெற்றவர்கள். தங்கள் தோற்றம், செயல்பாடு, விருப்பங்கள் என அனைத்திலும் ஆடம்பரத்தை கொண்டு வரும் திறன் படைத்த இவர்கள், ஆடம்பரமான உணவுகளை சமைப்பதில் வல்லவர்கள். ரிஷப ராசி கொண்டவர்கள் சமைக்கும் உணவுகளின் சுவை சர்வதேச தரத்தில் இருக்கும்.

தங்கள் ராசியின் அதிபதியான சுக்கிரனை போன்று, செய்யும் விஷயங்களில் புதுமையை முயற்சிக்க விரும்பும் இவர்களுக்கு, தங்களின் விருப்பமான சமையல் துறையிலும் புதிய முயற்சிகள் செய்யும் வாய்ப்புகள் பல கிடைக்கிறது. ரிஷப ராசியில் பிறந்தவர்களுக்கு உணவு என்பது நாவை திருப்தி செய்வது மட்டும் அல்ல, கண்களையும் திருப்தியடையச் செய்யும் ஒரு விஷயம் ஆகும். அந்த வகையில், உணவுகளை சமைப்பதில் மட்டும் அல்ல, அவற்றை ரசிக்கும் வகையில் பரிமாறுவதிலும் கெட்டிக்காரர்கள்!

**கன்னி!**

கன்னி ராசியில் பிறந்தவர்கள் அடிப்படையில் ஆழ்ந்த சிந்தனையாளர்கள்; கற்பனைக்கு எட்டாத உயரத்தை அடைய விரும்புபவர்கள், தங்கள் விருப்பத்தை அடைய கடினமாக உழைக்கும் பண்பு கொண்டவர்கள். கன்னி ராசியில் பிறந்தவர்களின் இந்த பேரார்வம், அவர்களின் சமையல் கலையிலும் பிரதிபலிக்கிறது.

உணவுகளை எப்படி சமைப்பது என்பதில் பலரும் கவனம் செலுத்த, யாருக்கு எந்த உணவு சமைப்பது? உணவுகள் வழியே உணவை உண்ணும் நபரின் ஆரோக்கியத்தை பாதுகாப்பது எப்படி? என்ற விஷயத்தில் கவனம் செலுத்தும் ஒரு ராசியாக கன்னி ராசி பார்க்கப்படுகிறது.

அறிவியல் ஆர்வம் கொண்ட இந்த கன்னி ராசியினர், தங்கள் சமையல் திறமையில் அறிவியலை உட்புகுத்த முயற்சி செய்கின்றனர் – அதில் எதிர்பார்த்த வெற்றியையும் காண்கின்றனர்!

**சிம்மம்!**

சூரியனை அதிபதியாக கொண்ட சிம்ம ராசியினர் அடிப்படையில் ஆளுமை பண்பு கொண்டவர்கள். தான் தேர்வு செய்யும் விஷயங்களில் முன்னிலையில் இருக்க வேண்டும் என விரும்பும் நபர்கள். சமையல் துறையில் இவர்களின் பங்களிப்பு குறித்து பேசுகையில், தங்கள் சமையல் கலை மூலம் மற்றவர்களை ஈர்க்க விரும்புகிறார்கள்.

அதற்காக கடினமாக உழைக்கவும் தயாராக இருக்கின்றனர். அடிப்படையில் ஆக்ரோஷமான குணத்திற்கு சொந்தக்காரர்களான சிம்ம ராசியினரை, சாந்தப்படுத்தும் ஒரு விஷயமாக இந்த சமையல் கலை பார்க்கப்படுகிறது. அவர்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் ஒரு விஷயமாகவும் இது பார்க்கப்படுகிறது.

**கடகம்!**

சந்திரனை ஆளும் கிரகமாக கொண்ட கடக ராசியினர் அடிபடையில் சாந்த குணம் கொண்டவர்கள்; கருணை உள்ளம் படைத்தவர்கள். கடக ராசியினரை பொறுத்தவரையில் உணவு என்பது அன்பின் வெளிப்பாடு; மற்றவர்கள் மீது அன்பு காட்ட அவர்கள் தேர்வு செய்யும் முதல் விஷயம் உணவு. தனி ஒரு நபரின் மனதையும், உடலையும் நிரப்பும் ஒரு விஷயமாக உணவை அவர்கள் பார்க்கின்றனர்.

அந்த வகையில் மற்றவர்கள் மீது அன்பு செலுத்த தங்களுக்கான ஒரு ஆயுதமாகவும் இதனை ஏற்கின்றனர். கடக ராசியில் பிறந்தவர்கள் உணவு பிரியர்கள் மட்டும் அல்ல, அந்த உணவுகளை சமைப்பதிலும் வல்லவர்கள். இயல்பாகவே அவர்களிடம் இந்த திறமை இருப்பதாக ஜோதிட நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**மீனம்!**

படைப்பாற்றல் மிக்க ராசிகளில் ஒன்றாக மீனம் பார்க்கப்படும் நிலையில், அவர்களின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் ஒரு இடமாக சமையலறை பார்க்கப்படுகிறது. மீன ராசி கொண்டவர்களின் சமையல் திறமை, மற்ற ராசிக்காரர்களிடம் இருந்து முழுவதுமாக மாறுபடுகிறது. தான் சமைக்கும் உணவின் சுவையில் தனித்துவத்தை கொண்டு வரும் இவர்கள், உணவுகளை சமைக்கும் பாணியிலும் தனித்துவத்தை வெளிப்படுத்துகின்றனர்.

அடிப்படையில் ராஜதந்திரிகள் என பெயர் எடுக்கும் மீன ராசியினர், தங்கள் ராஜதந்திரங்களை சமையல் கலையிலும் பயன்படுத்துகின்றனர். தங்கள் சமையலை மேம்படுத்த, அது சார்ந்த ஆராய்ச்சிகள் – ஆய்வுகள் பல செய்கின்றனர், நிபுணர்களுடன் கலந்துரையாடல் நடத்துகின்றனர். மீன ராசி கொண்டவர்களின் இந்த ஆர்வம், அவர்களை சிறந்த ஒரு சமையல் கலைஞராக மாற்றுகிறது!

**மகரம்!**

நடைமுறை வாழ்க்கைக்கு பொருந்தும் எதார்த்தமான சிந்தனைக்கு பெயர் பெற்ற ஒரு ராசியாக மகர ராசி பார்க்கப்படுகிறது. சமையல் கலையில் இவர்கள் செய்யும் முயற்சிகளும் அதுபோன்றே பார்ப்பதற்கு எளிமையாக இருக்கும்; ஆனால் எதிர்பார்க்காத பலனை கொண்டு வரும். இதற்கு காரணம், இவர்களின் கை பக்குவம் தான்! மற்றவர் செய்யும் விஷயங்களையே இவர்கள் செய்யும் நிலையிலும், இவர்களுக்கான வெளிப்பாடு மாறுபட்ட பலனை அளிக்கிறது.

எதிர்பார்ப்புக்கு அதிகமாக பலன்களை கொண்டு வருகிறது. மகர ராசி கொண்டவர்கள் சமைப்பதில் மட்டும் கெட்டிக்காரர்கள் அல்ல, ஒரு உணவகத்தை நிர்வாகம் செய்யும் அளவுக்கு நிர்வாக திறமை கொண்டவர்கள். ஆளுமை மிக்கவர்கள், தங்கள் ஆளுமை பண்புகளை பயன்படுத்தி துறையில் முன்னேற்றம் காண்கின்றனர்!

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# வெறும் வயிற்றில் இந்த உணவுகளை சாப்பிடாதீங்க..! இது ஆபத்தானது..!




காலையில் கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களும், அலுவலகத்திற்குச் செல்லும் ஊழியர்களும் அவசரத்தில் இருக்கிறார்கள். இந்த அவசரத்தில், பலர் சரியான காலை உணவைத் தவிர்த்துவிட்டு, தங்களுக்குக் கிடைக்கும் எதையும் சாப்பிடுகிறார்கள் அல்லது காபி மற்றும் தேநீரைத் திருப்திப்படுத்துகிறார்கள்.

ஆனால் இரவில் 7–8 மணி நேர தூக்கத்திற்குப் பிறகு, நம் வயிறு முற்றிலும் காலியாக இருக்கும். அந்த நேரத்தில் நாம் முதலில் சாப்பிடுவது நமது செரிமானம், ஆற்றல் அளவுகள் மற்றும் நாள் முழுவதும் நமது மனநிலையைப் பாதிக்கிறது. அதனால்தான் காலையில் நாம் என்ன சாப்பிடுகிறோம் என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

சில உணவுகளை வெறும் வயிற்றில் சாப்பிடுவது நெஞ்செரிச்சல், வாயு மற்றும் அஜீரணம் போன்ற வயிற்றுப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். உதாரணமாக, ஆரஞ்சு, திராட்சைப்பழம் மற்றும் எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்கள். இவை ஆரோக்கியமானவை என்றாலும், அவற்றில் உள்ள சிட்ரிக் அமிலம் வெறும் வயிற்றில் உட்கொண்டால் வயிற்றில் அமிலத்தன்மையை அதிகரிக்கிறது.

இது எரியும் மற்றும் அசௌகரியத்தை ஏற்படுத்தும். காலையில் காரமான உணவை சாப்பிடுவதும் நல்லதல்ல. இது வயிற்றுச் சுவர்களை எரிச்சலடையச் செய்யலாம். வெறும் வயிற்றில் குளிர்பானங்கள் அல்லது சோடாக்களை குடிப்பது வாயு மற்றும் வீக்கத்தை ஏற்படுத்தும்.

வாழைப்பழங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது. ஆனால் வெறும் வயிற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட வாழைப்பழங்களை சாப்பிடுவது இரத்தத்தில் மெக்னீசியம் அளவை அதிகரித்து உங்களை சோர்வடையச் செய்யும். அதேபோல், கேக்குகள், பேஸ்ட்ரிகள் மற்றும் சாக்லேட் போன்ற இனிப்பு உணவுகள் இரத்த சர்க்கரை அளவை அதிகரித்து மீண்டும் குறையச் செய்யும். இது உங்களை விரைவாக பசியாகவும் பலவீனமாகவும் உணர வைக்கும். பச்சை இலை காய்கறிகள் அல்லது அதிக நார்ச்சத்துள்ள சாலடுகள் கூட வெறும் வயிற்றில் சாப்பிட்டால் ஜீரணிக்க கடினமாக இருக்கும்.

இனிப்புகள் மற்றும் பேஸ்ட்ரிகள், சாக்லேட் அல்லது அதிக இனிப்பு எதுவும் இரத்த சர்க்கரையை விரைவாக உயர்த்தி, அதை விரைவாகக் குறைக்கும். இது உங்களை விரைவில் பசியாகவும் பலவீனமாகவும் உணர வைக்கும்.

ஆனால் காலையில் நாம் என்ன சாப்பிட வேண்டும்?

நம் உடலுக்கு எளிதில் ஜீரணிக்கக்கூடிய மற்றும் உற்சாகமளிக்கும் உணவு தேவை. வெதுவெதுப்பான நீரில் நாளைத் தொடங்குவது நல்லது. சிறிது எலுமிச்சை சாறுடன் அதைக் குடிப்பது உடலுக்கு உதவும். வேகவைத்த முட்டை, பாதாம் மற்றும் வால்நட்ஸ் போன்ற புரத உணவுகள் நீண்ட நேரம் வயிற்றை நிரப்ப உதவும்.

ஓட்ஸ் மற்றும் கோதுமை கஞ்சி போன்ற ஆரோக்கியமான கார்போஹைட்ரேட்டுகள் மெதுவாக ஆற்றலை வெளியிடுகின்றன. ஆப்பிள் மற்றும் பப்பாளி போன்ற எளிதில் ஜீரணிக்கக்கூடிய பழங்கள் நல்லது. மேலும், இட்லி, தோசை மற்றும் தயிர் போன்ற புளித்த உணவுகள் வயிற்றில் உள்ள நல்ல பாக்டீரியாக்களை அதிகரிக்கும்.

நமது உடல் ஒரு இயந்திரம் போன்றது. சரியான எரிபொருள் கொடுக்கப்பட்டால் மட்டுமே அது சரியாக வேலை செய்யும். எனவே காலையில் கூட சரியான காலை உணவை சாப்பிடுவதை நாம் வழக்கமாக்கிக் கொண்டால், நாள் முழுவதும் நாம் உற்சாகமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க முடியும்.



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சென்னை விமான நிலையத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் வழி அனுப்பி வைத்தார் . உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா உள்ளார்.

# IPL 2026 ஒத்திவைப்பு..? வெளியான பரபரப்பு தகவல்..!!

சென்னை, மார்ச். 01–

ஐபிஎல் திருவிழா தமிழ்நாடு, மேற்கு வங்காளம் மற்றும் அசாம் ஆகிய மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தல்களே, இந்த அட்டவணை தாமதத்திற்கு முக்கியக் காரணமாக கூறப்படுகிறது.



ஈஎஸ்பிஎன் கிரிக்இன்போ (ESPNcricinfo) வெளியிட்டுள்ள சமீபத்திய தகவல்களின்படி, ஐபிஎல் 2026 சீசன் முன்னதாக மார்ச் 28–ஆம் தேதி தொடங்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சட்டமன்ற தேர்தல்களை கருத்தில் கொண்டு, வீரர்களின் பாதுகாப்பு மற்றும் மைதான வசதிகளை உறுதி செய்ய, 2 நாட்களுக்கு முன்னதாகவே அதாவது மார்ச் 26–ஆம் தேதியே போட்டிகளை தொடங்க பிசிசிஐ (BCCI) ஆலோசித்து வருவதாக தெரிகிறது. இது குறித்து இறுதி முடிவெடுக்க ஐபிஎல் நிர்வாக குழு மார்ச் முதல் வாரத்தில் கூடி ஆலோசிக்கவுள்ளது.

2008–ஆம் ஆண்டு முதல் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறைப்படி, இந்த முறையும் ஐபிஎல் அட்டவணை இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட வாய்ப்புள்ளது.

பிசிசிஐ தரப்பில் இருந்து இதுவரை அதிகாரப்பூர்வமான அறிவிப்புகள் ஏதும் வராதது ரசிகர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும், மார்ச் 26–ல் தொடங்கி மே 31–ஆம் தேதி இறுதிப்போட்டியுடன் தொடரை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகிறது. தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்ட பின்னரே, எந்தெந்த போட்டிகள் எந்த ஊரில் நடைபெறும் என்ற முழுமையான வரைபடம் வெளியாகும். உலகக்கோப்பை உற்சாகம் முடிவதற்குள்ளேயே ஐபிஎல் அதிரடி தொடங்கவுள்ளது கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரிய விருந்தாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.



பழனி ரயில்வே பீடர் சாலையில் தமிழ்நாடு தலைகுனியாது என்ற தலைப்பில், சட்டமன்ற உறுப்பினரும், திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் நகரச் செயலாளர் வேலுமணி, நகர மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, நகரத் துணைச் செயலாளர் சக்திவேல் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# பல்வேறு திட்ட பணிகளை துவக்கி வைத்த எம்பி கணபதி ராஜ்குமார்..




திருப்பூர், மார்ச். 01–

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் கோயம்புத்தூரில் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் வார்டு எண் 58,59,60 ல் பல்வேறு பணி துவக்க விழாவினை தொடங்கி வைத்தார் .

உடன் திமுக முத்தனம் பாளையம் பகுதி கழகச் செயலாளர் குமார்.மாமன்ற உறுப்பினர்கள் கோமதி குமார்.பந்தல் சாமிநாதன். காந்திமதி ஈஸ்வரமூர்த்தி. வார்டு செயலாளர் ராஜேந்திரன்.


கேசவன்.சிவசாமி.பகுதி அவைத் தலைவர் ஜெகநாதன். மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் ஊர் பொதுமக்கள் மாநகராட்சி அதிகாரிகள் பங்கேற்றனர் நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் அவர்களுக்கு பொதுமக்கள் சார்பில் உற்சாகமாக வரவேற்பு அளிக்கப்பட்டது..

# சங்கீதாவின் ரகசிய வாக்குமூலம் கசிந்தது எப்படி..?

சென்னை, மார்ச். 01–

தமிழக அரசியல் மற்றும் திரையுலகை உலுக்கி வரும் நடிகர் விஜய்யின் விவாகரத்து விவகாரத்தில்,

தற்போது புதிய சட்ட ரீதியான கேள்விகள் எழுந்துள்ளன. கடந்த பிப்ரவரி 24 அன்று, விஜய்யின் மனைவி சங்கீதா ‘சிறப்பு திருமணச் சட்டத்தின்’ (Special Mar–riage Act) கீழ் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கின் தீவிரத்தன்மை கருதி, அது தற்போது குடும்பநலநீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.



இந்த விவகாரத்தில் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது நீதிமன்ற நடைமுறைகள் அல்ல; மாறாக, அந்த வழக்கின் மிக ரகசியமான ‘அபிடவிட்’ (Affidavit) எனப்படும் வாக்குமூல நகல் எப்படி பொதுவெளியில் கசிந்தது என்பதுதான். வழக்கமாக திரையுலகப்பிரபலங்களின் குடும்பப் பிரச்சனைகள் நீதிமன்றப் படிக்கட்டுகளை மிதிப்பது இது முதன்முறையல்ல. இதற்கு முன்னதாக தனுஷ், ரவி மோகன், ஜி.வி. பிரகாஷ் போன்ற முன்னணி நட்சத்திரங்களின் விவாகரத்து விவகாரங்களும் நீதிமன்றம் வரை சென்றன. ஆனால், அவர்களின் தனிப்பட்ட புகார்கள் அல்லது வாக்கு மூலங்கள் இதுபோன்று வரிக்கு வரி சமூக வலைதளங்களில் கசிந்ததில்லை.

குடும்ப நல நீதிமன்றங்களை பொறுத்தவரை, தம்பதியரின் அந்தரங்கம் காக்கப்பட வேண்டும் என்பது மிக முக்கியமான விதிமுறை. அப்படி இருக்கையில், விஜய்யின் வழக்கில் மட்டும் இவ்வளவு விரிவான குற்றச்சாட்டுகள் அடங்கிய ஆவணங்கள் வெளியானது எப்படி என்ற கேள்வி வலுத்துள்ளது. இது திட்டமிட்டு யாரோ ஒரு தரப்பால் கசிய விடப்பட்டதா அல்லது நீதிமன்ற நடைமுறையில் ஏற்பட்ட குளறுபடியா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. 2026 சட்டமன்றத் தேர்தலை ஒட்டி விஜய் அரசியல் களத்தில் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையில், அவரது அரசியல் எதிரிகள் யாரேனும் இதில் பின்னணியில் இருக்கிறார்களா என்ற கோணத்திலும் அவரது ரசிகர்கள் விவாதித்து வருகின்றன.

# பாஜக சார்பில் தெருமுனை கூட்டம்!



திருப்பூர், மார்ச். 01–

நாளை நமதே தமிழ்நாடு நமதே பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் வடக்கு மாவட்டம் வடக்கு சட்டமன்றம் நெருப்பெரிச்சல் மண்டல் 7 வது வார்டு அவிநாசி நகர் பஸ் ஸ்டாப் அருகே தெருமுனை பிரச்சார கூட்டம் சக்தி கேந்திரா பொறுப்பாளர் மண்டல துணை தலைவர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக மாவட்டச் செயலாளர். ரம்யா. மண்டல் தலைவர் உதயகுமார். பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் தொழிற்சங்க மாவட்ட தலைவர் மாஸ் முருகன். மாவட்ட துணைத் தலைவர் வெங்கடேஷ். மாவட்ட இளைஞரணி தலைவர் முனீஸ். ஐஜேகே சார்பில் மாவட்ட துணை தலைவர் முருகன். மாவட்ட துணை செயலாளர் அலெக்ஸ்.மாநகர தலைவர் பாஸ்கர்.ஒன்றிய செயலாளர் வினோத். பாஜக சார்பில் நிர்வாகிகள் கிளைத் தலைவர்கள் பழனிச்சாமி. சக்திவேல். அங்குசாமி. பி எல் எ 2 நிர்வாகிகள் கோபி.

அய்யப்பன்.சங்கர்.கிளை நிர்வாகிகள் பெரியசாமி. செல்வராஜ். வாட்டர் மகேஷ். நீலமேகம். படையப்பா.மகளிர் அணி நிர்வாகிகள் மகேஸ்வரி. வெண்ணிலா. தீபா. காயத்ரி. மலர்விழி. கீதா. செல்வி. மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்..

# வேலை வாய்ப்பு
## இந்திய இராணுவத்தில் 76 காலியிடங்கள்

**Indian Army Recruitment 2026**

- Vacancy: 76
- Post Name: NCC Special Entry Scheme 124 Course (Oct 2026)
- Qualification: Any Degree + NCC Certificate
- Selection Process: Merit List, Certificate Verification

நிறுவனத்தின் பெயர்: இந்திய ராணுவம்
வேலை வகை: மத்திய அரசு வேலைகள்
வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை
மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 76 (ஆண்கள் & பெண்கள்) NCC சிறப்பு நுழைவுத் திட்டம் 124 பாடநெறி (அக்டோபர் 2026) பதவிகள்
வேலையிடும் இடம்: சென்னை
தொடக்க தேதி: 12.02.2026
கடைசி தேதி: 16.03.2026
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
அதிகாரப்பூர்வ இணையதளம்: http://www.joinindianarmy.nic.in/




மதுரை, தெற்குவாசல் CWCD டிரஸ்ட் இலவச தையல் பள்ளியில் பயிற்சிப் பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் அற்பனம் முருகேசன் வரவேற்று பேசிட சிறப்பாளர்களாக வழக்கறிஞர் குருசாமி, பிசப் ஜெபாஸ்டீன்இன்பராஜ், ரோட்டரிசங்க நாகராஜன், நிலா சேவை மைய அறக்கட்டளை நிறுவனர் கவிக்குயில் கணேசன், அயூப்கான் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கி பாராட்டி பேசினார்கள் விழாவை ஏற்பாடு செய்த CWCD டிரஸ்ட் தலைவர் செல்வராணி நன்றி கூறினார்



பழனி மாரியம்மன் மாசித்திருவிழாவை முன்னிட்டு, வருத்தமில்லா வாலிபர் சங்கம் சார்பில் பொது விருந்து நடைபெற்றது. இதில் சரவணப் பொய்கை கந்த விலாஸ் அதிபர் என் பாஸ்கரன், தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு மாவட்ட தலைவர் ஜே.பி.சரவணன், நிர்வாக தலைவர் முருகானந்தம், கவுன்சிலர் சுரேஷ், முன்னாள் கவுன்சிலர் வி.ஏ.பி.குமார் மகாலிங்கம் ஆகியோர் பங்கேற்றனர்



மதுரை மாநகராட்சி திருப்பரங்குன்றம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமில் 14 வயதுடைய பெண்களுக்கு ஹெச்.பி.வி. (HPV) தடுப்பூசி செலுத்துவதை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் பார்வையிட்டார் அருகில் மாவட்ட சுகாதார அலுவலர் / மாநகர்நல அலுவலர் (பொ) மரு.பொற்செல்வன் அவர்கள், உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக் அவர்கள், முதன்மை மருத்துவ அலுவலர் மரு.ஸ்ரீகோதை மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் உள்ளனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி, சென்னை முகாம் அலுவலகத்தில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஓ.பி.ரவீந்திரநாத் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம் ஆகியோர் சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

# உங்கள் நகைக்கு எவ்வளவு கடன் கிடைக்கும்? 2026-ன் புதிய விதிமுறைகள் மற்றும் கணக்கீடுகள்?

புதுடெல்லி, மார்ச். 01–

ஈரான் – இஸ்ரேல் இடையிலான போர் பதற்றமானது கொழுந்து விட்டு எரியத் தொடங்கியுள்ள இந்த நிலையில், சர்வதேச சந்தையில் தங்கம் விலை எகிறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து உச்சத்தை எட்டி வரும் தங்கம் விலை, உங்கள் கைவசம் உள்ள தங்க நகைகள் இப்போது வெறும் ஆபரணங்கள் மட்டுமல்ல. அவை உங்கள் அவசர காலத்தின் மிகப்பெரிய பொருளாதார பாதுகாப்பு. ஆனால் தங்கம் விலை ஏறிவிட்டது என்பதற்காக எல்லா வங்கிகளும் ஒரே மாதிரியான கடன் தொகையை வழங்குவதில்லை. 2026–ல் இந்திய ரிசர்வ் வங்கி (RBI) கொண்டு வந்துள்ள புதிய விதிகள், நீங்கள் வாங்கும் கடன் தொகைக்கு ஏற்ப உங்கள் நகையின் மதிப்பை தீர்மானிக்கின்றன. ஆக தங்கத்தை அடகு வைக்கும் முன், நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அந்த விதிமுறைகள் என்னென்ன? கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன?




இன்றும் பல நடுத்தர குடும்பங்களில் அவசரம் என்றால் முதலில் கைகொடுப்பது தங்கம் தான். ஆனால் அந்த தங்கம் உங்களிடம் எந்த வடிவத்தில் இருக்கிறது என்பதும் இனி கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது உங்கள் வசம் உள்ள தங்க ஆபரணங்கள் மற்றும் தங்க நாணயங்களை வைத்து கடன் பெற முடியும். ஆனால் தங்கக் கட்டிகள் மற்றும் பிஸ்கட்டுகள் அல்லது கோல்ட் இடிஎஃப் போன்றவற்றை அடமானம் வைத்து கடன் பெற முடியாது. ஆர்பிஐ தங்கக் கட்டிகள் போன்ற பிரைமரி கோல்டு மீது கடன் வழங்குவதை கட்டுப்படுத்தி உள்ளது. தங்கம் என்பது ஒரு உற்பத்தி சாராத மற்றும் ஊக வணிகத்திற்கு உட்பட்ட சொத்து என்பதால், பொருளாதார பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதை எஸ்பிஐ வங்கியும் உறுதி செய்துள்ளது.

24 கேரட் தங்க கட்டிகள் மற்றும் பிஸ்கட்டுகளுக்கு எதிராக கடன் வழங்காது என தெரிவித்துள்ளது. முதலீட்டாளர்களே உஷார்! இஸ்ரேல்–ஈரான் போர்: உங்கள் சேமிப்பை பாதுகாப்பா வச்சுக்கோங்க? மேலும் கடன் வழங்குநர்கள் பிரைமரி தங்கம் அல்லது வெள்ளி, அல்லது அவற்றின் அடிப்படையில் இயங்கும் நிதிச் சொத்துகளான கோல்டு இடிஎஃப் அல்லது மியூச்சுவல் ஃபண்டுகள் மீதும் முன்பணமோ அல்லது கடனோ வழங்க கூடாது என்றும் கூறியுள்ளது. இருப்பினும் கடன் வழங்குநர்கள், வாடிக்கையாளர்களின் குறுகிய கால நிதி தேவைகளை பூர்த்தி செய்ய தங்க ஆபரணங்கள் மற்றும் நாணயங்கள் மீது கடன் வழங்க அனுமதித்துள்ளது.

ஒரு தனிநபர் அதிகபட்சமாக 1 கிலோகிராம் ( 125 சவரன்) வரையிலான தங்க ஆபரணங்களை அடகு வைத்துக் கொள்ளலாம். பிப்ரவரி 23 நிலவரப்படி, ஒரு கிராம் தங்கம் 14,750 ரூபாயாக ஆக இருக்கும்போது, 5 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட கடன்களுக்கு (75% LTV அடிப்படையில்) ஒரு கிராமுக்கு 11,000 ரூபாய் வரை கடன் கிடைக்கும். அதன்படி பார்த்தால் தற்போதைய சந்தை விலையில் ஒரு நபர் சுமார் 1.37 கோடி ரூபாய் வரை அதிகபட்சமாக நகைக்கடன் பெற முடியும். இருப்பினும் சில வங்கிகள் அதிகபட்ச கடன் வரம்பை நிர்ணயம் செய்துள்ளன. உதாரணத்திற்கு எஸ்பிஐ 50 லட்சம் ரூபாய் வரை மட்டுமே கடன் வழங்குகிறது.

தங்க நாணயங்களுக்கு எதிராகவும் கடன் பெறலாம். எனினும் சில நிபந்தனைகளை விதித்துள்ளது. அதிகபட்சமாக தங்க நாணயங்களின் மொத்த எடை 50 கிராமுக்கு மேல் இருக்க கூடாது. தற்போதைய சந்தை நிலவரப்படி, அதன் மதிப்பு சுமார் 5.25 லட்சம் ரூபாயாகும்.

தங்கத்தின் மதிப்பை நிர்ணயம் செய்வதற்கும், ஆர்பிஐ சில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. வங்கிகளும் தங்கத்தின் விலையை தீர்மானிக்க 2 அம்சங்களை பின்பற்றி, அதில் எது குறைவோ அதையே எடுத்து கொள்கின்றன.

1. கடந்த 30 நாட்களின் சராசரி முடிவு விலை. 2. முந்தைய நாளின் முடிவு விலை. மேற்கண்ட இரு விலைகள் IBJA அல்லது செபியால் அங்கீகரிக்கப்பட்ட சந்தை மூலம் வெளியிடப்பட்டதாக இருக்க வேண்டும். உங்கள் நகையின் குறிப்பிட்ட தரத்திற்கு விலை இல்லை என்றால், அதற்கு மிக நெருக்கமான விலையை வைத்து மதிப்பீடு செய்யப்படும். அப்படி மதிப்பீடு செய்யப்படும் போது நகையில் உள்ள தங்கத்தின் உண்மையான மதிப்பு மட்டுமே கணக்கில் கொள்ளப்படும். அதில் பதிக்கப்பட்டுள்ள கற்கள், ரத்தினங்கள் அல்லது இதர அலங்கா ரங்களுக்கு எந்தவித மதிப்பும் வழங்கப்படாது. 2026 ம் ஆண்டு விதிகளின் படி, நீங்கள் வாங்கும் கடன் தொகைக்கு ஏற்ப அதிகபட்ச கடன் அளவு மாறுபடும். உதாரணத்திற்கு 2.5 லட்சம் ரூபாய் வரையிலான கடனுக்கு, நகையின் மதிப்பில் 85% வரை கடன் பெறலாம். இதே 2.5 லட்சம் ரூபாய் முதல் 5 லட்சம் ரூபாய் வரையில், நகையின் மதிப்பில் 80% மட்டுமே கடன் பெற முடியும். 5 லட்ச ரூபாய்க்கு மேல் நகை கடன் பெற்றால் நகையின் மதிப்பில் 75% மட்டுமே கடன் பெற முடியும்.

ஒருவர் தங்கத்தை அடகு வைத்த பிறகு, அதன் பாதுகாப்பிற்கு கடனளிப்பவரே முழு பொறுப்பாகும். ஒரு வேளை கடன் வாங்கிய காலத்தில் நகைக்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால், அதற்கான செலவை வங்கியே ஏற்க வேண்டும். உங்களுடைய நகை காணாமல் போனாலோ அல்லது ஆய்வின் போது எடையிலோ, தரத்திலோ குறைபாடு கண்டறியப்பட்டாலும், வங்கி உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என வாடிக்கையாளருக்கு சாதகமான பல அறிவிப்புகளை கொடுத்துள்ளது.

முக்கியமாக கடனை செலுத்திய பிறகும், வங்கி உங்கள் நகையை குறிப்பிட்ட காலத்திற்குள் தர வேண்டும். அப்படியில்லாமல் இழுக்கடித்தால் ஒவ்வொரு நாள் தாமதத்திற்கும் வங்கி வாடிக்கையாளருக்கு 5,000 ரூபாய் அபராதம் வழங்க வேண்டும். ஒரு வேளை தவிர்க்க முடியாத காரணங்கள் இருப்பின் தாமதத்திற்கு முறையான காரணம் இருந்தால் அதை வங்கி வாடிக்கையாளருக்கு தெரிவிக்க வேண்டும். ஒரு வேளை வாடிக்கையாளர் கடனை திருப்பி செலுத்திவிட்டு, நகையை பெற்று கொள்ளாமல் இருந்தால், வங்கி அமைதியாக இருந்து விடக் கூடாது. வாடிக்கையாளர்கள் பதிவு செய்துள்ள முகவரிக்கு கடிதம் மூலமாகவோ, மெயில் அல்லது எஸ் எம் எஸ் மூலம் கட்டாயம் தெரியப்படுத்த வேண்டும்.

# பெண்களுக்கு குட் நியூஸ்..!! புதிய அரசாணையை வெளியிட்ட தமிழ்நாடு அரசு..!!

சென்னை, மார்ச். 01–

தமிழ்நாடு அரசுப் பணிகளில் பெண்களுக்கான 30 சதவீத இடஒதுக்கீட்டில், ஆதரவற்ற விதவைகளுக்கு வழங்கப்பட்டு வரும் 10 சதவீத உள் இடஒதுக்கீட்டு முறையில் முக்கிய சீர்திருத்தத்தை அரசு மேற்கொண்டுள்ளது. பொருளாதார மாற்றங்களை கருத்தில் கொண்டு, இந்த சலுகையைப் பெறுவதற்கான தகுதி வரம்பில் நீண்ட காலத்திற்கு பிறகு ஒரு அதிரடி மாற்றத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.





இதுவரை, ஆதரவற்ற விதவை என்பதற்கான சான்றிதழ் பெற்று வேலை வாய்ப்பில் முன்னுரிமை பெற வேண்டுமானால், சம்பந்தப்பட்ட பெண்ணின் மாத வருமானம் ரூ.4,000 –க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற விதிமுறை இருந்தது. தற்போது நிலவும் விலைவாசி உயர்வு மற்றும் வாழ்வாதார செலவுகளைக் கணக்கில் கொண்டு, இந்த வருமான உச்சவரம்பை 8,000 ரூபாயாக உயர்த்தி அரசு புதிய அரசாணையை வெளியிட்டு ள்ளது. இந்த அதிரடி முடிவின் மூலம், முன்னதாக வருமான வரம்பு காரணமாகச் சலுகை மறுக்கப்பட்ட பல ஏழைப் பெண்களுக்கு இனி அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

அதேவேளையில், இந்தச் சலுகை யாருக்குப் பொருந்தும் என்பது குறித்தும் அரசு தெளிவான விளக்கத்தை அளித்துள்ளது. சட்டப்பூர்வமாக தனது கணவரை இழந்த பெண்களுக்கு மட்டுமே இந்த 10 சதவீத உள் இடஒதுக்கீடு பொருந்தும். நீதிமன்றம் மூலம் விவாகரத்து பெற்ற பெண்கள், இந்தப் பிரிவின் கீழ் முன்னுரிமை கோர முடியாது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட இந்த வருமான வரம்பு உயர்வு, கணவரை இழந்து வாழ்வாதாரத்திற்காக போராடும் பெண்களுக்கு ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமாக பார்க்கப்படுகிறது.

# ஈரான்-இஸ்ரேல் மோதல்: ஈரானுக்கு விமானங்களை நிறுத்தி வைத்த நாடுகள் & விமான நிறுவனங்களின் லிஸ்ட்..!

ஈரான், மார்ச். 01–

ஈரான்இஸ்ரேல் இடையேயான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், பல நாடுகளும் விமான நிறுவனங்களும் ஈரான் மற்றும் இஸ்ரேல் நோக்கி செல்லும் விமான சேவைகளை இடைநிறுத்தியுள்ளன. ரஷ்ய விமான போக்குவரத்து துறை வெளியிட்ட தகவலின்படி, ரஷ்ய விமான நிறுவனங்கள் ஈரான் மற்றும் இஸ்ரேல் நோக்கான அனைத்து விமானங்களையும் தற்காலிகமாக நிறுத்தியுள்ளன. இதனிடையே, இந்தியா வின் முக்கிய விமான நிறுவனங்களான இண்டிகோ, ஏர் இந்தியா ஆகியவை, ஈரான் இஸ்ரேல் மோதல் காரணமாக மேற்கு ஆசியா வுக்கான விமான சேவைகளை நிறுத்தியுள்ளன. அதேபோல், ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனமும் வளைகுடா பகுதியின் சில பகுதிகளில் நிலவும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, மேற்கு நோக்கிச் செல்லும் அனைத்து சர்வதேச விமானங்களையும் இடைநிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளது. பயணிகள் மற்றும் விமான பணியாளர்களின் பாதுகாப்பே தங்களின் முதன்மை கவலை என்றும், நிலைமையை நெருக்கமாக கண்காணித்து வருவதாகவும் நிறுவனம் கூறியுள்ளது.




விமானங்களை ரத்து செய்த அல்லது இடைநிறுத்திய நிறுவனங்கள்

- ஏர் பிரான்ஸ்
- ஏர் இந்தியா
- பிரிட்டிஷ் ஏர்வேஸ்
- ஐபீரியா எக்ஸ்பிரஸ்
- இண்டிகோ
- ஜப்பான் ஏர்லைன்ஸ்
- எல்.ஓ.டி. பாலிஷ் ஏர்லைன்ஸ்
- லுஃப்தான்ஸா
- நார்வேயன் ஏர்
- துருக்கி ஏர்லைன்ஸ்
- வேர்ஜின் அட்லாண்டிக்
- கத்தார் ஏர்வேஸ்
- ஏர் அல்ஜீரியா Algerie

# பாஜகவில் இணைந்த வைகோவின் அக்கா மகன்..!!



சென்னை, மார்ச். 01–

வைகோவின் அக்கா மகனான கார்த்திகேயன், திராவிட கட்சிகளின் பாதையிலிருந்து விலகி, தற்போது பாரதிய ஜனதா கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவியைப் பூர்வீகமாகக் கொண்டு சென்னையில் உணவக தொழில் செய்து வரும் கார்த்திகேயன், ஏற்கனவே அரசியலில் தடம் பதித்தவர் தான். கடந்த 2019–ஆம் ஆண்டு வைகோ திமுகவுடன் கூட்டணி அமைத்தபோது, அந்த முடிவில் கார்த்திகேயனுக்கு உடன்பாடு இல்லை என்று கூறப்பட்டது. இதன் விளைவாக, அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அவர் அதிமுகவில் இணைந்தார். இருப்பினும், அதிமுகவில் அவருக்கு எதிர்பார்த்த முக்கியத்துவம் கிடைக்கவில்லை என்கிற அதிருப்தி கடந்த சில காலங்களாகவே இருந்து வந்தது. இதனால் அதிமுக தலைமையுடன் ஏற்பட்ட மனக்கசப்பால், அக்கட்சியிலிருந்து விலகும் முடிவை அவர் எடுத்தார்.

இந்நிலையில், பாஜகவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டதாக கூறி, தமிழக பாஜக சட்டமன்றக் குழுத் தலைவர் நயினார் நாகேந்திரன் முன்னிலையில் கார்த்திகேயன் பாஜகவில் இணைந்துள்ளார்.

# மத்திய கிழக்கு நாடுகளுக்கான 444 விமான சேவைகள் ரத்து!

புதுடெல்லி, மார்ச். 01–

மத்திய கிழக்கு நாடுகளுக்கான 444 விமான சேவைகள் இன்று ரத்து செய்யப்படுவதாக விமான போக்குவரத்துத் துறை அறிவித்துள்ளது. நேற்று 410 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்ட நிலையில் இன்று 444 விமானங்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல்–ஈரான் போர் காரணமாக மத்திய கிழக்கு நாடுகள் தங்கள் வான்வெளியை மூடின.

# சென்னையில் வணிக பயன்பாடுகளுக்கான சிலிண்டர் விலை ரூ.29.50 உயர்ந்து ரூ.1929 ஆக விற்பனை!

சென்னை, மார்ச். 01–

19 கிலோ எடை கொண்ட சமையல் சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது. சென்னையில் இன்று முதல் ரூ.29.50 உயர்ந்து ரூ.1929 ஆக விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ சிலிண்டரின் விலையில் எந்த மாற்றமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

# அடியோடு மாறும் ரியல் எஸ்டேட் விதிமுறைகள்..!!

புதுடெல்லி, மார்ச். 01–

மத்திய வருமான வரித்துறை வெளியிட்டுள்ள புதிய வரைவு அறிக்கை, நடுத்தர வர்க்கத்தினர் மற்றும் சிறு முதலீட்டாளர்களுக்கு ஒரு பெரும் நிம்மதியை தரும் வகையில் அமைந்துள்ளது. குறிப்பாக, சொத்து பரிவர்த்தனைகளின் போது பான் (PAN) எண் விவரங்களை குறிப்பிடுவதில் நிலவி வந்த சில நடைமுறை சிக்கல்களை குறைக்க அரசு திட்டமிட்டுள்ளது.




**பான் கார்டு கட்டாயம் :**

தற்போதைய சட்டப்படி, ரூ.10 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள நிலம் அல்லது வீடு போன்ற அசையா சொத்துகளை வாங்கும்போது, வாங்குபவர் மற்றும் விற்பவர் ஆகிய இருவருமே பான் எண்ணைக் குறிப்பிடுவது கட்டாயமாகும். ஆனால், கடந்த சில ஆண்டுகளில் நிலத்தின் மதிப்பு கணிசமாக உயர்ந்துள்ளதால், சிறிய நகரங்களில் கூட சாதாரணப் பரிவர்த்தனைகளுக்குப் பான் கார்டு தேவையுள்ளது. இதனைச் சீர்செய்யும் வகையில், பான் கார்டு சமர்ப்பிப்பதற்கான உச்ச வரம்பை ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.20 லட்சமாக உயர்த்த வருமான வரித்துறை முன்மொழிந்துள்ளது.

**ஊரக பகுதிகளுக்கு கிடைக்கும் பலன் :**

புதிய விதிமுறை அமலுக்கு வரும் பட்சத்தில், ரூ.20 லட்சத்திற்கு குறைவான மதிப்புள்ள சொத்துக்களை வாங்குபவர்கள் பான் எண் இல்லாமலேயே ஆவணப் பணிகளை முடிக்க முடியும். இது குறிப்பாக கிராமப்புறங்கள் மற்றும் சிறிய நகரங்களில் முதல் முறையாக வீடு வாங்கும் எளிய மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும். மேலும், சொத்துக்களைப் பரிசாகப் பெறுதல் அல்லது கூட்டு மேம்பாட்டு ஒப்பந்தங்கள் (Joint Devel–opment Agreements) போன்ற விவகாரங்களிலும் குறிப்பிட்ட மதிப்பிற்கு மேல் பான் கார்டு விதிகள் கடுமையாக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எப்போது அமலுக்கு வரும்..?**

விலைவாசி மற்றும் சந்தை நிலவரங்களை கருத்தில் கொண்டு நிபுணர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று இந்த வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போது இது பொது மக்களின் கருத்துக்காக வைக்கப்பட்டுள்ளது. ஒரு வேளை இந்த முன்மொழிவு ஏற்கப்பட்டால், வரும் 2026–ஆம் ஆண்டு ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் புதிய விதிகள் நடைமுறைக்கு வர வாய்ப்புள்ளதாக தெரிகிறது. இது ரியல் எஸ்டேட் துறையில் சிறிய அளவிலான முதலீடுகளை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020